ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமத்  த்ரு'தீய ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி அருளியது

# ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள்

(வடகலை ஸம்ப்ரதாயம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள்

(வடகலை ஸம்ப்ரதாயம்)

## குரு பரம்பரை வாழித்திருநாமம்

திருமால் பொன்மகளார் சேனையர் கோன் வாழியே ⋆
தென் குருகூர் மகிழ்மாறன் நாதமுனி வாழியே ⋆
பரன் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி வாழியே ⋆
பார் அளிக்கும் ஆளவந்தார் பெரிய நம்பி வாழியே ⋆
அருமறை சொல் எதிராசர் கிடாம்பி ஆச்சான் வாழியே ⋆
அவர் தனயன் இராமானுசப்புள்ளான் வாழியே ⋆
தரும மிகும் அரங்கேசர் அப்புள்ளார் வாழியே ⋆
சரண் அளிக்கும் வேதாந்த தேசிகர் தாம் வாழியே

## பெரிய பெருமாள்

(பங்குனி ரேவதி)

இரு விசும்பில் திருமகளோடு இனிது அமர்ந்தான் வாழியே ⋆
இயற் பூமி நீளைகளோடு இணங்கி நிற்பான் வாழியே ⋆
திருவரங்கப் பெருநகருள் திகழ்ந்த பிரான் வாழியே ⋆
தீர்த்தங்கொள் பாற்கடலுள் துயில் அமர்ந்தான் வாழியே ⋆
அருமறையின் பொருளாகும் அச்சுதனார் வாழியே ⋆
அகிலத்தின் இதயத்துள் இருப்புடையோன் வாழியே ⋆
விரதங்கள் அனைத்திற்கும் விரும்பி நிற்போன் வாழியே ⋆
விடலரிய பெரிய பெருமாள் அடிகள் வாழியே

## பெரிய பிராட்டியார்
## (பங்குனி உத்திரம்)

செங்கமலப் பூவுதித்த பாவை நல்லாள் வாழியே ⋆
சீர்மிகு மங்கையர் கழுத்தில் திருவானாள் வாழியே ⋆
பங்குனியில் உத்தர நாள் பார் உதித்தாள் வாழியே ⋆
பகருமிரு பாக்கிமாய் என்ற செல்வி வாழியே ⋆
அங்கயல் பாய்வயல் அரங்கம் சிறக்க வந்தாள் வாழியே ⋆
அணி அரங்கன் திருமார்பில் அமர்ந்து அருள்வாள் வாழியே ⋆
இங்கிதத்தால் திருமாலுக்கு இதம் உழைப்பாள் வாழியே ⋆
ஏராரும் திருமகளார் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீ சேனை நாதன்
## (ஐப்பசி பூராடம்)

இப்புவியில் அரங்கேசர் சேனையர் கோன் வாழியே ⋆
இந்திரற்கும் அரன் அயற்கும் நியமிப்போன் வாழியே ⋆
ஐப்பசியில் பூராடத்து அவதரித்தான் வாழியே ⋆
அழகாரும் சூத்ரவதியாள் அன்பன் வாழியே ⋆
எப்புவியும் விதிகளின் முன் ஏத்தும் அவன் வாழியே ⋆
எழிற் குருகை நகர் முனிவர்க்கு அருள் புரிந்தான் வாழியே ⋆
அற்புதமார் திருமகளார் அடிமுடியோன் வாழியே ⋆
அலங்காரச் சேனையர் கோன் அடி இணைகள் வாழியே

## ஆழ்வார்கள்

பொய்கை பூதம் பேயார் மழிசையர் கோன் வாழியே ⋆
பொன் மதிள் சூழ் குருகையர் கோன் மதுரகவி வாழியே ⋆
துய்ய குலசேகரனார் பட்டர் பிரான் வாழியே ⋆
துன்பற்ற வில்லிபுத்தூர் துலங்க நின்றான் வாழியே ⋆

ஐயமறுந் தொண்டரடிப்பொடி ஆழ்வார் வாழியே ⋆
அன்புலாம் பாண் பெருமாள் அரட்டமுக்கி வாழியே ⋆
வையம் உய்ய அவர் சொன்ன தமிழ் மறைகள் வாழியே ⋆
வைப்பாக ஆழ்வார்கள் உதித்த நாள் வாழியே

## ஆழ்வார்கள் வாழித்திருநாமம்

### ஸ்ரீ பொய்கையாழ்வார்
### (ஐப்பசி திருவோணம்)

ஐப்பசியில் திருவோணத்து அவதரித்தான் வாழியே ⋆
அழகமர்ந்த கச்சி நகர் சிறக்க வந்தோன் வாழியே ⋆
அற்புதமா நல் வையம் தகளி செய்தான் வாழியே ⋆
ஆர்வமிகு வார் கடலா நெய்யிட்டான் வாழியே ⋆
நல் பதத்து கதிரவனே விளக்கம் என்றான் வாழியே ⋆
நம் பொருட்டால் அந்தாதி நூற் அளித்தான் வாழியே ⋆
பொற்பதத்துச் சோதி தனைக் கண்டுரைத்தான் வாழியே ⋆
பொய்கை முனி அடி இணையும் வடிவழகும் வாழியே

### ஸ்ரீ பூதத்தாழ்வார்
### (ஐப்பசி அவிட்டம்)

அன்பே தகளியா விளக்க நின்றான் வாழியே ⋆
ஆர்வத்தை நெய் ஆக்கி அளித்த பிரான் வாழியே ⋆
இன்புருகு சிந்தையிடு திரியிட்டான் வாழியே ⋆
இயல் ஞானச் சுடர் விளக்கை எரித்து வைத்தான் வாழியே ⋆
அன்பே தகளி நூறும் அருள் செய்தான் வாழியே ⋆
ஐப்பசியில் அவிட்டத்தில் சகத்துதித்தான் வாழியே ⋆
இன்புகழ் சேர் கடன் மல்லை அவதரித்தான் வாழியே ⋆
எங்கள் வைப்பாம் பூதத்தார் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீ பேயாழ்வார்
## (ஐப்பசி சதயம்)

திருப்பொலிந்த மாமயிலை நகர் உதித்தான் வாழியே ⋆
சீர் ஐப்பசிச் சதயம் சிறந்த வள்ளல் வாழியே ⋆
நெருக்கமுடன் இடைகழியில் நின்ற பிரான் வாழியே ⋆
நேசத்தால் திருமாலின் வடிவு கண்டான் வாழியே ⋆
திருக்கண்டே நூறு சொன்ன செல்வத்தோன் வாழியே ⋆
சீர் ஆழி வண்ணனையே தெய்வம் என்றான் வாழியே ⋆
பெருக்க மிகு மழிசையர் கோன் ஏத்த நின்றான் வாழியே ⋆
பெரு நிலத்தில் பேயாழ்வார் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீ திருமழிசைப்பிரான்
## (தை மகம்)

நான்முகனைப் படைத்தவன் நாரணன் என்றான் வாழியே ⋆
நான்முகற்குச் சங்கரன் தான் மகன் என்றான் வாழியே ⋆
நான்முகன் தொண்ணூற்றாறு நன்களித்தான் வாழியே ⋆
நல் தடஞ் சூழ் திருமழிசை அமரும் அவன் வாழியே ⋆
தேன் குணனாய் தை மகத்தில் வந்துதித்தான் வாழியே ⋆
திருச்சந்தம் நூற்றிருபதீந்த பிரான் வாழியே ⋆
வான் பொருளா மாதவனே பரன் என்றான் வாழியே ⋆
மழிசையர் கோன் மதுமணம் கொள் மலர் அடிகள் வாழியே

## ஸ்ரீ நம்மாழ்வார்
## (வைகாசி விசாகம்)

மன்னு புகழ்த் திருவிருத்தம் நூறு சொன்னான் வாழியே ⋆
மால்பாதத்து ஆசிரியம் ஏழளித்தான் வாழியே ⋆

முன்னும் அந்தாதி பதிற்றெட்டு ஏழு ஈன்றான் வாழியே ⋆
    முந்தை ஆயிரம் மறையை மொழிந்த வள்ளல் வாழியே ⋆
கன்னி மதிள் திருக்குருகூர் வந்த பிரான் வாழியே ⋆
    காசினி வைகாசி விசாகத்துதித்தான் வாழியே ⋆
மன்னு பொருள் நால் வேதம் தமிழ் செய்தான் வாழியே ⋆
    மகிழ் மணக்கும் குருகையர் கோன் மலர் அடிகள் வாழியே

## ஸ்ரீ மதுரகவியார்
## (சித்திரை சித்திரை)

மொய்த்த பொழில் திருக்கோளூர் வந்த வள்ளல் வாழியே ⋆
    முன்பு தாம் அருணன் போல் உதிக்கும் அவன் வாழியே ⋆
சித்திரையில் சித்திரை நாள் சிறக்க வந்தோன் வாழியே ⋆
    சிறப்புடைய பதினொன்று செய்தளித்தான் வாழியே ⋆
வைத்தநிதிப் பராங்குசனையே உரைத்தான் வாழியே ⋆
    வையகத்தில் ஆசிரியன் பரன் என்றான் வாழியே ⋆
சித்திரமாய்த் தென் கதிரோன் காணவந்தோன் வாழியே ⋆
    சீர் மதுரகவியார் தம் மலர் அடிகள் வாழியே

## ஸ்ரீ குலசேகராழ்வார்
## (மாசி புநர்பூசம்)

அஞ்சனமா மலைப் பிறவி சிந்திப்போன் வாழியே ⋆
    அருள் மாசிப் புநர் பூசத்து அவதரித்தான் வாழியே ⋆
அஞ்சுடர் சூழ் திருமணத்தூண் அடைந்த பிரான் வாழியே ⋆
    அணி அரங்கன் அடியார்க்கே ஆட்பட்டான் வாழியே ⋆
செஞ்சாலி மிகுவஞ்சி நகர் வந்தான் வாழியே ⋆
    திருமொழி நூற்றைந்து செய்யுள் செப்பினான் வாழியே ⋆

வஞ்சமற அடியார்க்காய்ச் சபதம் இட்டான் வாழியே⋆
    வஞ்சியர் கோன் மலர்ப் பதங்கள் மாநிலத்தில் வாழியே

## ஸ்ரீ பெரியாழ்வார்
## (ஆணி ஸ்வாதி)

திருப்பல்லாண்டென மாலைப் பாடினான் வாழியே⋆
    செஞ்சொல் நானூற்று எழுபத்து மூன்றுரைத்தான் வாழியே⋆
பெருக்கமுறும் ஆனிதனில் சோதிவந்தான் வாழியே⋆
    பெருமை மிகும் ஆண்டாளைப் பெற்ற பிரான் வாழியே⋆
மருப் பொசித்த மாதவனே பரனென்றான் வாழியே⋆
    மாசறப் பாண்டியன் அவையில் கிழி அறுத்தான் வாழியே⋆
விருத்தி பெறு வில்லிபுத்தூர் விளங்க வந்தான் வாழியே⋆
    விட்டு சித்தன் மலர்ப் பதங்கள் மேதினியில் வாழியே

## ஸ்ரீ ஆண்டாள்
## (ஆடி பூரம்)

கமலமுடன் வில்லிபுத்தூர் விளங்கவந்தாள் வாழியே⋆
    காரார் நற்துழாய்க் கானத்து அவதரித்தாள் வாழியே⋆
விமலமாம் திருவாடிப் பூரத்தாள் வாழியே⋆
    விட்டுசித்தன் வளர்த்தெடுத்த இளங்கிழையாள் வாழியே⋆
அமலத் திருப்பாவை ஐயாறு அளித்தருள்வாள் வாழியே⋆
    ஆக நூற்று எண் ஐந்து மூன்றுரைத்தாள் வாழியே⋆
அமுதனாம் அரங்கனுக்கே மாலை இட்டாள் வாழியே⋆
    ஆண்டாள் தம் இணை அடிகள் அனவரதம் வாழியே

## ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்
## (மார்கழி கேட்டை)

மன்னு மதிள் திருமண்டங்குடி வந்தான் வாழியே ⋆
மார்கழியில் நல் கேட்டை வந்துதித்தான் வாழியே ⋆
தென் அரங்கர் அடி இணையே பற்றி நின்றான் வாழியே ⋆
திருமாலை ஐ ஒன்பது அருளினான் வாழியே ⋆
துன்னு புகழ்த் திருப்பள்ளியெழுச்சி சொன்னான் வாழியே ⋆
தொல் புகழ்சேர் அன்பர்க்கே தொண்டு கொண்டான் வாழியே ⋆
தொன்னகரில் பொன்பாவைக் களித்த பிரான் வாழியே ⋆
தொண்டரடிப்பொடி ஆழ்வார் துணையடிகள் வாழியே

## ஸ்ரீ திருப்பாணாழ்வார்
## (கார்த்திகை ரோகிணி)

எம்பெருமான் உறையூரார் ஏத்த வந்தோன் வாழியே ⋆
ஏற்ற கார்த்திகையில் உரோகிணி உதித்தான் வாழியே ⋆
அம்புவியில் அரங்கரைக் கண்டுகந்தான் வாழியே ⋆
அகமகிழந்தே அவர் புகழ நின்று உயர்ந்தோன் வாழியே ⋆
அம்புயநேர் தாண்முனிதோள் வைத்திட்டான் வாழியே ⋆
அமலனாதிப்பிரான் பத்து அருள் செய்தான் வாழியே ⋆
பைம் பொழில் சூழ் திருவரங்கம் திகழ்ந்த பிரான் வாழியே ⋆
பாண் பெருமாள் பங்கயத்தாள் பார் தன்னில் வாழியே

## ஸ்ரீ திருமங்கை மன்னன்
## (கார்த்திகை கார்த்திகை)

கார்த்திகையில் கார்த்திகை நாள் களிக்க வந்தோன் வாழியே ⋆
காசினியில் திருக்குறையல் அவதரித்தான் வாழியே ⋆

சார்த்த திருமொழி தன்னைச் சாதித்தான் வாழியே ⋆
　　தாண்டகம் ஓர் இரண்டு எமக்குத் தந்த வள்ளல் வாழியே ⋆
எர்த்த எழுகூற்றிருக்கை இருமடலோன் வாழியே ⋆
　　இம்மூன்றில் நூற்றுப் பத்தொன்பதுளான் வாழியே ⋆
வார்த்த புகழ் குமுதவல்லி மணவாளன் வாழியே ⋆
　　மங்கையர் கோன் மலர்பதங்கள் மாநிலத்து வாழியே

### ஸ்ரீ எம்பெருமானார்
### (சித்திரை திருவாதிரை)

சீராரும் பெரும்பூதூர் சிறக்க வந்தோன் வாழியே ⋆
　　சித்திரையில் ஆதிரை நாள் செகத்துதித்தோன் வாழியே ⋆
ஆராத அருளாளர் அருளுடையோன் வாழியே ⋆
　　அருமறை சொல் பெரிய நம்பி அடிபணிந்தான் வாழியே ⋆
ஏராரும் பாஷியத்தை ஈன்ற பிரான் வாழியே ⋆
　　எழுபத்து நால்வரையும் எமக்களித்தான் வாழியே ⋆
ஓராத பரசமயக் குறும்பறுத்தான் வாழியே ⋆
　　ஒளி திகழும் எதிராசர் இணை அடிகள் வாழியே

## ஓரான்வழி ஆசார்யர்கள் வாழித்திருநாமம்

### ஸ்ரீ நம்மாழ்வார்
### (வைகாசி விசாகம்)

திருக்குருகூர்த் திருப்புளியில் வளர்ந்த பிரான் வாழியே ⋆
　　சேமங்கொள் தென்மறைகள் வெளியிட்டான் வாழியே ⋆
பெருக்கம் உற்ற அடி நிலையாய் வந்துதித்தான் வாழியே ⋆
　　பெரு நிலைகள் மதுரகவிக்கு அருள் புரிந்தோன் வாழியே ⋆
கருத்துடை நாதமுனிக்கும் கருணை செய்தான் வாழியே ⋆
　　கருணை மிகு சேனையர் கோன் அடி பணிந்தான் வாழியே ⋆

குருக்களுக்குத் திலகமெனக் கூற நின்றான் வாழியே ⋆
குருகூரன் சடகோபன் குலத்தாள்கள் வாழியே

## ஸ்ரீமந்நாதமுனிகள்
## (ஆனி அனுஷம்)

சேமங்கொள் வீரநாராயணபுரத்தான் வாழியே ⋆
செல்வமுறும் ஆனிதனில் அனுடத்தான் வாழியே ⋆
தேமருவு தென்குருகூர் நகர் அமர்ந்தான் வாழியே ⋆
தேசு மிகு சடகோபன் சரண் அடைந்தான் வாழியே ⋆
நாம் உய்ய நாலாயிரத்தின் பொருள் அளித்தான் வாழியே ⋆
நன்றாகத் தாளத்தில் இசைத்துரைத்தான் வாழியே ⋆
சீர்மிகுத்த யோகமுடைச் செல்வனார் வாழியே ⋆
திருப் பொலிந்த நாதமுனி திருவடிகள் வாழியே

## ஸ்ரீ உய்யக்கொண்டார்
## (சித்திரை கார்த்திகை)

எந்தாதை நாதமுனி இணை அடியோன் வாழியே ⋆
ஏராரும் சித்திரையில் கார்த்திகையான் வாழியே ⋆
நந்தாமல் நாதமுனி நலம்புகழ்வோன் வாழியே ⋆
நாலிரண்டும் ஐயைந்து நன்றளித்தான் வாழியே ⋆
செந்தாதார் வெள்ளறையில் சிறக்க வந்தோன் வாழியே ⋆
சேம மணக்கால் நம்பிக்கருள் புரிந்தோன் வாழியே ⋆
சிந்தாமல் தரிசனத்தை விளங்குவித்தான் வாழியே ⋆
தேசுறும் உய்யக்கொண்டார் சேவடிகள் வாழியே

## ஸ்ரீ மணக்கால் நம்பிகள்
## (மாசி மகம்)

உய்யக்கொண்டார் அடியை உகந்தடைந்தோன் வாழியே ⋆
ஒப்பில் மணக்கால் பதியில் உதித்தருள்வோன் வாழியே ⋆
துய்ய கும்ப மக நாளில் தோன்றல் உற்றோன் வாழியே ⋆
துயரில் குணக்குழுவாகிச் சகம் புகழ்ந்தோன் வாழியே ⋆
ஐயமற ஆளவந்தார்க்கு அருள் புரிந்தோன் வாழியே ⋆
அவர் பணிய அரங்கனடி நிதி கொடுத்தான் வாழியே ⋆
செய்ய தமிழ் மாலைகளைச் சிந்திப்போன் வாழியே ⋆
சீர் மணக்கால் நம்பிகள் தம் சேவடிகள் வாழியே

## ஸ்ரீ ஆளவந்தார்
## (ஆடி உத்திராடம்)

நாகணையான் வீரநாராயணத்து உதித்தான் வாழியே ⋆
நற்கடக உத்திராடத்து அவதரித்தான் வாழியே ⋆
போகமுறு மணக்காலான் பொன்னடியோன் வாழியே ⋆
பொய்யாருங் குமதி மதப் பூண்டறுத்தான் வாழியே ⋆
ஊகமுடைத் தத்வார்த்த நிலையிட்டான் வாழியே ⋆
உடையவரும் ஈடேற உகந்திருந்தான் வாழியே ⋆
ஆகம ப்ராமாண்யம் அருள் செய்தான் வாழியே ⋆
அழகாரும் ஆளவந்தார் அடியிணை தான் வாழியே

## ஸ்ரீ பெரிய நம்பிகள்
## (மார்கழி கேட்டை)

மணிமாட மதிள் அரங்கத்து அவதரித்தான் வாழியே ⋆
மார்கழியின் நல்கேட்டை மாணவந்தான் வாழியே ⋆

குணமிகுந்த ஆளவந்தார் அடி தொழுதோன் வாழியே ⋆
    குருக்களுக்குள் முக்கியனாய்க் கூறநின்றான் வாழியே ⋆
துணைகெழுசீர்ப் பராங்குசற்குத் தொண்டானான் வாழியே ⋆
    துன்பில்லா உடையவர்க்குத் தேசிகன்தாள் வாழியே ⋆
மணமகிழும் தத்துவத்தின் வளமளித்தான் வாழியே ⋆
    வண் புகழார் பெரிய நம்பி மலர்ப் பதங்கள் வாழியே

## ஸ்ரீ எம்பெருமானார்
## (சித்திரை திருவாதிரை)

சீராரும் பெரும்பூதூர் சிறக்க வந்தோன் வாழியே ⋆
    சித்திரையில் ஆதிரை நாள் செகத்துதித்தோன் வாழியே ⋆
ஆராத அருளாளர் அருளுடையோன் வாழியே ⋆
    அருமறை சொல் பெரிய நம்பி அடிபணிந்தான் வாழியே ⋆
ஏராரும் பாசியத்தை ஈன்ற பிரான் வாழியே ⋆
    எழுபத்து நால்வரையும் எமக்களித்தான் வாழியே ⋆
ஓராத பரசமயக் குறும்பறுத்தான் வாழியே ⋆
    ஒளி திகழும் எதிராசர் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீ திருக்குருகைப்பிரான் பிள்ளான்
## (ஐப்பசி பூராடம்)

ஐப்பசியில் பூராடத்து அவதரித்தான் வாழியே ⋆
    அருட்கடலாய் எதிராசர் அடி பணிந்தான் வாழியே ⋆
தப்பில் திருமலை நம்பி தனயன் தாள் வாழியே ⋆
    தமிழ்மறை ஆறாயிரத்தால் தகவுரைத்தான் வாழியே ⋆
ஒப்பில்லா உடையவருக்கு உணர்வின் செய் வாழியே ⋆
    ஒற்றிய சோழியன் முதலோர்க்கு ஓதுவித்தான் வாழியே ⋆

செப்பமிகு வேதாந்தச் சீர் அறிந்தோன் வாழியே ⋆
திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகள் வாழியே

## ஸ்ரீ கிடாம்பியாச்சான்
## (சித்திரை ஹஸ்தம்)

அந்தமீல் சீர் எதிராசர் அடிதொழுதோன் வாழியே ⋆
ஆதரங்கொள் சித்திரையில் அத்தத்தான் வாழியே ⋆
இங்கிதனாய் அத்ரிகுலத்து அழகமர்ந்தான் வாழியே ⋆
எதிராசர் மகாநத்தே ஏற்ற முற்றான் வாழியே ⋆
செந்தமிழும் வடகலையும் திகழ்நாவான் வாழியே ⋆
சீரணி இராமானுசன் புகழ்வோன் வாழியே ⋆
சந்ததிக்குத் தவம் பலிக்கச் சதிர்த்தெழுந்தோன் வாழியே ⋆
சார்வாம் கிடாம்பி ஆச்சான் தாள் இணைகள் வாழியே

## ஸ்ரீ கிடாம்பி ராமானுசப்புள்ளான்
## (சித்திரை திருவாதிரை)

தீதகல் கிடாம்பி ஆச்சான் அடியோன் வாழியே ⋆
சித்திரைச் சீர் ஆதிரையில் செகத்துதித்தோன் வாழியே ⋆
போதமர்ந்தப் பொற்கச்சிப் புரத்து வந்தான் வாழியே ⋆
புறச்சமயப் பொய்ப் போதம் புடைத் தடித்தான் வாழியே ⋆
ஆதரத்தில் பாடியத்தை அமர்ந்துறைப்போன் வாழியே ⋆
ஆழ்வார்கள் அருமறையும் ஆங்களிப்போன் வாழியே ⋆
ஏதமில் சம்பிரதாய எழிலெரிப்போன் வாழியே ⋆
இராமானுசப்புள்ளான் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீ கிடாம்பி ரங்கராச அப்புள்ளார் (பங்குனி ரோகிணி)

இராமானுசப் புள்ளான் இணை அடிகள் வாழியே ⋆
ஈனமிலாப் பங்குனி உரோகிணியான் வாழியே ⋆
இராமானுசன் கருத்தை எடுத்துறைப்போன் வாழியே ⋆
என்தாதை அப்புள்ளார் ஏத்த நின்றான் வாழியே ⋆
பராங்குசன் தன் மறைப்பொருளைப் பயில் விப்பான் வாழியே ⋆
பரம்பொருளைப் பணிவிக்கும் பனுவல் செய்தான் வாழியே ⋆
அராநிகர்கும் குமதிகளை அழிக்கும் அவன் வாழியே ⋆
அரங்கராச அப்புள்ளான் அம்புயத்தாள் வாழியே

## ஸ்ரீ நடாதூர் அம்மாள் (சித்திரை சித்திரை)

சுத்த குண விட்டு சித்தன் சுடரடியோன் வாழியே ⋆
சுருதப்பரகாசிகையைச் சொல்வித்தோன் வாழியே ⋆
தத்துவ ப்ரமேயத்தின் சாரமீன்றான் வாழியே ⋆
தகு தூப்புல் பிள்ளைக்குத் தகவுரைத்தான் வாழியே ⋆
புத்திமிகு சாரார்த்த சதுட்டயத்தோன் வாழியே ⋆
புகழ் பாடியப் பொருளைப் புதர்க்கீவோன் வாழியே ⋆
சித்திரையில் சித்திரை நாள் கச்சி வந்தோன் வாழியே ⋆
சீராரும் அம்மாள் தன் சேவடிகள் வாழியே

## ஸ்ரீ கிடாம்பி அப்புள்ளார் (சித்திரை திருவாதிரை)

எம் அரங்கராசரடி எய்தினான் வாழியே ⋆
ஏகாந்த உபதேசம் ஈந்த பிரான் வாழியே ⋆
சம்மதமாம் சரண நெறி சாதித்தான் வாழியே ⋆
சதிரான சித்திரை ஆதிரை நாளோன் வாழியே ⋆

விம்முமதி வரத குரு வேந்தடியோன் வாழியே ⋆
வேதாந்த தேசிகனார் விரும்ப நின்றான் வாழியே ⋆
செம்மதமாம் ந்யாயகுலிசம் அளித்தான் வாழியே ⋆
சேமமாம் அப்புள்ளார் சீரடிகள் வாழியே

## ஸ்ரீ வேதாந்த தேசிகன்
## (புரட்டாசி திருவோணம்)

உத்தமாம் புரட்டாசி ஓணத்தான் வாழியே ⋆
ஓர் மதுரகவி பனுவல் உள்ளுரைத்தான் வாழியே ⋆
தத்தில் முனிவாகன போகம் இழைத்தான் வாழியே ⋆
தமிழ் மறைக்கு எண்பதினாயிரம் உரைத்தான் வாழியே ⋆
எத்திசையும் எதிவரர் போல் ஏத்த நின்றான் வாழியே ⋆
எழில் அரங்கர் இன்னருளுக்கு இலக்கானான் வாழியே ⋆
தொத்தறவே வாதிகளைத் தொலைத்திட்டான் வாழியே ⋆
தூப்புல் கோன் திருவடிகள் துலங்க வென்றும் வாழியே

கவிவாதி சிங்கமெனக் கண்ணுற்றான் வாழியே ⋆
கலங்காது இத்தரிசனத்தைக் காத்தளித்தான் வாழியே ⋆
நவில்தரு வேதாந்தத்தின் நல்லாசான் வாழியே ⋆
நவையில் எல்லா தந்திரத்தின் சுதந்தரத்தான் வாழியே ⋆
புவி குளிர நூல் பலவும் புகன்றிட்டான் வாழியே ⋆
புகரிலாது ரகசியப் பொருள் உரைத்தான் வாழியே ⋆
கவிபாய் வேங்கடத் திருமால் கவி கண்டை வாழியே ⋆
கலியாண குணத் தூப்புல் காவலன் தாள் வாழியே

## ஸ்ரீ நயினாராசாரியார்
## (ஆவணி ரோகிணி)

இருவகைய நிகமாந்தாரியன் தனயன் வாழியே ⋆
    எதிபதி சித்தாந்த ஐயம் இலங்க வந்தோன் வாழியே ⋆
அருள் வரதர் திருநாமம் அணிந்துயர்ந்தோன் வாழியே ⋆
    ஆவணி ரோகிணியில் அவதரித்தான் வாழியே ⋆
அருமதி காண் உயிர் சிந்தாமணி அளித்தான் வாழியே ⋆
    அவ்வியலா நூல் பலவும் அமைத்த நம்பி வாழியே ⋆
ஒரு தனி இத்தரிசனத்தை உயர்த்த பிரான் வாழியே ⋆
    ஓண் தூப்புல் குல நயினார் இணை அடிகள் வாழியே

## ஸ்ரீமத் த்ரு'தீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி எல்லா ஆழ்வார் ஆசார்யர்களுக்கும் வாழித்திருநாமம் அருளிச் செய்யும்போது இராமானுச நூற்றந்தாதி சிறப்பை நோக்கி தனியாக கீழ்வருமாறு அருளியுள்ளார்

எம்பெருமானார் சமயத்தேற்ற மறை வாழியே ⋆
    ஏரார் நாலாயிரத்தை முடித்த மறை வாழியே ⋆
எம்பெருமானார் மகிமை யேத்துமறை வாழியே ⋆
    ஏதமிலாரிய நிஷ்டை இயம்புமறை வாழியே ⋆
அன்புடைய அமுதனார் இசைத்த மறை வாழியே ⋆
    அடியார்கள் நூற்றெட்டாய் எண்ணுமறை வாழியே ⋆
அம்புயத்தாள் கணவனோடு ஒழுகு மறை வாழியே ⋆
    அணிநூற்று அந்தாதியென அமர்ந்த மறை வாழியே

**ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்**

**ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள் முற்றிற்று**